ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீச்வராய நம:

ஆர்ய தர்மம்.

दानं भोगो नाशस्तिस्रो गतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुंक्ते तस्य तृतीया गतिर्भवति ॥

ஈகை, அனுபவித்தல் அழிவு என இம்மூன்று விதமாய்ச் செல்வமும் உபயோகப்படலாம். யாதொரு தனிகன் பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் பொருளைப் பாதுகாக்கின்றனனோ, அப்பொருளுக்கு மூன்றாவதான அழிவு என்பதே பிரயோஜனமாகும்.

அறிஞர்களாயிருப்பவர்கள் ஒவ்வொருவரும், தம்மால் செய்யப்படும் கருமங்களின் பயனை நன்குணர்ந்து செய்வார்களாகில் அவற்றின் பயனை அடையலாமேயன்றி, அவ்விதமில்லாவிடில் அது உபயோகமற்றதாய்விடும் என்று நிரூபிக்கின்றார். தன் பூர்வஜன்மபுண்ணிய வசத்தாற் செல்வமடைந்துள்ள ஒருவன் அப்பொருட்செல்வத்தைப் பாதுகாப்பது எதற்கெனவும், அதனாலுண்டாகும் பயன் என்னவென்றும் ஆலோசித்து அப்பயனையடைவதற்கு முயலவேண்டும். பொருளின் உபயோகம் சிறந்த புண்ணியகாலங்களிற் அஃதை, பிறருக்குத் தானஞ் செய்வதும், தன் ஆத்மசுகத்திற்காக செலவிட்டுக் கொள்ளுதலுமேயாம். இவ்விரண்டு வழிகளிலும் செலவிடப்படாமல், பாதுகாக்கப்படும் பொருள், பிறரால் அபகரிக்கப்பட்டழிந்து போம். இவ்வுலகில் பலர் பொருளை வளர்ப்பதே அதற்கு முக்கியமான பயனெனக்கருதி தம் ஜீவதசை வரையில் ஒருவிதத்திலுமதை உபயோகிக்காமல் பாதுகாத்து மரணத்தையடைகிறார்களென்பதை நாம் நேரில் அறிந்திருக்கிறோம். ஔவையம்மையும் "பாடுபட்டுத்தேடி பணத்தைப் புதைத்து வைத்த மானிடரே கேளுங்கள்" என்கிற பாட்டில் நிந்தித்திருக்கிறாள். ஆதலால், பொருளைப் பாதுகாத்து விருத்தி செய்வதே அதன் முக்கியப் பிரயோஜனமெனக்கருதி அவ்வாறு செய்வதிலேயே தன் வாணாளை வீணாக்காமல், அதை நற்காரியங்களிற் சாஸ்திரங்களின் கருத்துக்கிணங்க உபயோகித்து, இம்மை, மறுமையென் இருவகைப் பயன்களையும் அடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுபம்

ஆர்யதர்மம்.
ருதிரோத்காரி-ஞூ ஐப்பசி-மீ ௧௬௨

श्रीनारदेन मुनिना कृपया शुकाय
वीणाविनोदरसिकेन भवाद्विमुक्त्यै ।
योऽकारि सम्यगुपदेश इहाह मेष
संगृह्य वच्मि मतिमोहहरं वरं तम् ॥

நாரதரால்சுகருக்குஉபதேசிக்கப்பட்ட மோக்ஷஸாதன மார்க்கம்.

தன் அருகாமையில் பக்திசிரத்தையுடன் நிற்கும் சுகரைப் பார்த்து நாரதர்கூறுகின்றார். ஜனங்களுக்கிருக்கும் சகல சோகங்களையும் நாசம் செய்க் கூடியதும், பொருமை சாந்தி முதலிய குணங்களை யளிக்கின்றதாயும். விரும்பிய சுகங்களைக் கொடுக்கும் திறமைவாய்ந்த சாஸ்திரங்களை சிறந்த குருக்களின் உபதேசமூலமாய் நன்கு கற்று அதனாலேற்படும் உத்தம ஞானத் தால் துக்கத்தை விலக்கி சுகம் பெறலாம். ஒவ்வொருதினமும் சாஸ்திரப்பயிர்ச்சியில்லாத மூடர்களை சோகத்திற்குக் காரண மானபலவும், பயத்திற்குக்காரணமான புலவும் அடையுமே யல்லாமல் சாஸ்திரக்ஞர்களிடம் நெருங்கமாட்டாது.

शोकस्थानसहस्राणि भयस्थानशतानि च ।
दिवसे दिवसे मूढमाविशन्ति न पण्डितम् ॥

ஆகையால் உனக்கேற்படும் அநிஷ்ட நிவிருத்தியின் பொருட்டு என்னால் கூறப்படும் விஷயத்தை நன்கறிந்து கொள். புத்

தியை நமக்கு ஸ்வாதீனமாய்ச் செய்து கொண்டால் ஒரு விதமான துக்கமுமேற்படாது. எவ்விதசோக மோகத்தை யனுபவிப்பதற்கும் காரணம் மனதே. ஒவ்வொருசமயமும் நாம் விரும்பாததும் எதிர்பார்க்கத்தகாததுமான வியாதி முதலிய அநிஷ்டங்கள் பலாத்காரமாய் வருவதாலும், நம்மால் ஆவலுடன் விரும்பப்பட்ட பொருள். பெண்டீர் முதலானவை கிட்டாததாலும் அறிவில்லாதவர்கள் மானஸீகான துக்கத்தை யடைந்து மிகவும் வருந்துகிறார்கள். நம்மிடமிருக்கும் அதிக குணம் பொருந்திய ஓர்பொருளுக்கு நஷ்டமேற்படுமாயின் பிறகு அதன் குணத்தை ஒரு சமயத்திலும் அற்பங்கூட நாம் கருதக் கூடாது. ஆராய்ந்துபார்க்கின் அதனிடத்திலிருக்கும் ஸ்நேகபந்தமானது நம்மை விடாமல் எப்பொழுதும் கஷ்டப் படுத்தும். ஆகையல் அதை உடனே விடவேண்டும் என்று சான்றோர் கொள்கை.

द्रव्येषु समतीतेषु ये गुणास्तान्नचिन्तयेत् ।
न तानाद्रियमाणस्य स्नेहबन्धः प्रमुच्यते ॥

அவ்விதம் பற்றுதலற்றிருப்பதற்கு இஃதொரு உபாயம். அதாவது எந்தவஸ்துவில் நமக்கு ஆதியில் அபிமானமேற்படு கின்றதோ அதில் அதுமுதற்கொண்டே தோஷத்தையும் கவனித்து வரவேண்டும். நமக்குத் திருப்தியில்லாத பொருள் களில் எவ்விதமிருப்பமோ அவ்விதமே இஷ்டமான வஸ்துக் களிலும் பற்றுதலற்றுப் பழகி வந்தால் அவைகளுக்கு நாச மேற்பட்டாலும் அவைகளின் வியோகத்தால் கஷ்டமின்றி வைராக்கியமுண்டாகும். இவ்விதமல்லாமல் இழந்த வஸ்துவை யுத்தேசித்து அதிகக் கவலைப் பட்டுச் சிந்திக்கும் மனிதனுக்கு ஏற்படும் பயன் யாதென்று ஆலோசிப்போமாகில் இவ்வுல கிலோ பரலோகத்திலோ அடையக் கூடிய சுகத்திற்குச் சாத னமான தனம், தர்மம், கீர்த்தி முதலிய யாதொன்றும் இல்லை யென்று ஸ்பஷ்டமாய்த் தெரிந்த விஷயம். போனபதார் த்தை யுத்தேசித்து ஒருவன் கவலைப் படுவானுகில் அதனுல்

அவன் அதிக கஷ்டத்தை யடைவதைத் தவிர அது விலகி விடுமென்று சொல்ல அற்பமாவது இடம் உண்டா? குணங்களோடு சம்பந்தமும் குணங்களை விட்டுப் பிரிவும் சகலப்பிராணிகளுக்கும் இயற்கையாய் ஏற்பட்டிருக்குமிவ் விஷயத்தில் அவைகளின் பிரிவினல் ஒருவர் சோகத்தை யடைவது எவ்விதம் உசிதமாகும்? மனிதர்கள் மரித்தாலும்சரி, பொருளுக்கு நஷ்டமேற்பட்டாலும்சரி, இதுவிஷயத்தில் ஒருவன் கஷ்டப்படுவானுகில் ஸ்வபாவத்தில் தனக்கிருக்கும் ஸம்ஸார கஷ்டத்தோடு இதையும் சேர்த்து இருபங்காக அநுபவிப்பதைத் தவிர வேறு பயனில்லை. எவரெவர் சத்குருக்களின் உபதேசத்தால் சிறந்த அறிவை யடைந்து லோகத்தின் ஸ்வபாவத்தை இவ்விதமென்று நன்குணர்ந்தவர்களோ அவர்களுக்கு இவ்விதக்காரியங்களில் மனக்கலக்கமும் வியஸனத்தால் கண்ணீர் விடுதலும் சம்பவிக்காது. மற்றும் ஒருவனுக்குச் சரீரசம்பந்தமாகவோ மனதை அவலம்பித்தோ உண்டாகும் துக்கத்தை வராமல் தடுக்க எவ்வித முயற்சியாலும் இயலாவிட்டால் அதை அறிஞர் அற்பமேனும் சிந்திக்கமாட்டார். இவ்விதமேற்படும் ஸம்ஸார சம்பந்தமான துக்கத்திற்கு அதை மனதினுல் கருதாமலிருப்பதே சிறந்த ஔஷதமாகும். அதைப்பற்றி நாம் சிந்திப்போமாகில் முறையே அது விருத்தி யடைந்து நம்மையும் அதிகமான ஆபத்திற்குள்ளாக்கும் மானிடர்களுக்கு துக்கம் சாரீரமென்றும், மானஸ மென்றும், இருவகை யுண்டு. அவ்விரண்டினுள் சரீரசம்பந்தமான துக்கமேற்பட்டால் ஔஷதங்களால் விலக்கவேண்டும். மானஸமான துக்கம் நேர்ந்தால் ஆசார்யானுக்கிரகத்தால் கிடைத்த அறிவினுல் விலக்க வேண்டும். பண்டிதர்களாயிருப்பின் இவ்விதமே அநுஷ்டிப்பார்கள். உலகில் அக்ஞானிகளால் பெரும்பாலும் தமது சுகத்திற்கு முக்கிய ஸாதனமாய்க் கருதப்படும்.

அத்வைதஸபாபண்டிதரான பிரும்மஸ்ரீ யக்ஞஸ்வாமி
சாஸ்திரிகளவர்களால் இவ்வருஷம் நடந்த
அத்வைதஸபையின் ஆரம்பதினத்தில்
உபந்யஸிக்கப்பட்ட

ஸ்ரீ பகவத்பாதாள் அவதாரமகிமை.

(நூஉ-வது பக்கத்தொடர்ச்சி)

ஒரு சரீரவிசேஷத்தால் காரியார்த்தமாய் ஈசுவரன் தாதாத்மய அபிமானத்துடன் சம்பந்திப்பதற்கு அவதாரம் என்று பெயர் என்று பிர்ம்மானந்த ஸரஸ்வதி சொல்லியிருக்கிறார். தனது ஸௌசீல்யாதி குணங்களைக் காட்டுவதற்காக பகவான் நீசமான மனுஷ்ய சரீரசம்பந்தம் செய்கிறார்.

என்று பகவான் சொல்லியிருக்கிறார். தர்மம் என்றால் அலௌகிகசிரேயஸ்ஸாதனம் என்று பொருள். தர்மக்லானி உண்டாகி அதர்மம் மேலிட்டிருந்தால் அதை நிவர்த்திபண்ண பகவான் அவதரிக்கிறார். தர்மம் என்றால் அலௌகிக ச்ரேயஸ்ஸாதனமென்ற பொருளை அனுசரித்து வேதம் என்றும் ஈசுவரன் என்றும் தாத்பரியம் கிரஹிக்கலாம். வேதங்களாகிய பிரமாணத்திற்கு லோபமுண்டானபோது பகவான் மத்ஸ்யாவதாரம் எடுத்து வேதோத்தாரணம் செய்தார். பிரமேயலோபம் வந்தாலும், அதாவது ஆசார அனுஷ்டானங்களுக்கு லோபம் வந்தாலும், பகவான் அவதாரஞ் செய்து தர்மஸம்ஸ்தாபனம் செய்கிறார். ஜனங்கள் ஈசுவரனை மறந்தகாலங்களில் தன்னையும் தன்னிடம் பக்தியையும் ஸ்தாபிப்பதற்கு ஈசுவரன் அவதாரம் செய்வதுண்டு. சிலகாலங்களில் வேதாத்யயனாதிகள் இருந்தாலும் வேதத்தின் அர்தத்தை சரிவர தெரிந்து கொள்ளாமல் விப்ரதிபத்திகளும் விபரீத கிரஹணங்களும் ஏற்பட்டு தர்மக்லானி உண்டாகியிருக்கிறது. அம்மாதிரி காலத்தில் தான் ஆசார்யாளாக அவதாரம் செய்து பிரஸ்தானத்ரயம் என்று

சொல்லப்பட்ட பிரம்ம ஸூத்ர பாஷ்ய, கீதா பாஷ்ய, உபநிஷத்பாஷ்யங்களால் லோக ஹிதார்த்தம் வேதார்த்த நிர்ணயம் செய்து கொடுத்திருக்கிறார். ஈசுவரனுக்கு ஞானசக்தி, க்ரியா சக்தி என்று இரண்டு சக்தியுண்டு. க்ரியாசக்தியை மேற்கொண்டு ஏற்பட்ட அவதாரங்களாகிய ராம கிருஷ்ணுத்யவதாரங்களில் பலத்தால் துஷ்டநிக்ரஹமும், சிரேஷ்ட பரிபாலனமும், பண்ணி பகவான் தர்மஸ்தாபனம் செய்திருக்கிறார். ஞானசக்திப் பிரதானமாய் மஹாவிஷ்ணுவே வேதவ்யாஸரூபமாகவும் ஈசுவரனே பகவத்பாதாள்ளாகவும் அவதரித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. க்ரியாசக்தியைக் காட்டிலும் ஞான சக்தி விசேஷமானது. பலத்தினுல் துஷ்டநிக்ரஹம் பண்ணி பிரஜைகளுக்கு ஐஹிகஸுக ஸம்பாதனம் செய்து கொடுப்பதைக் காட்டிலும் நிச்ரேயஸ் பலப்ரதமான ஞானத்தை நிரூபணம் செய்வது மேலானதால் ஞானுவதாரங்களுக்கு உத்கர்ஷம் கல்பிப்பதும் நியாயமாகும்.

பகவத்பாதாளும் ஒரு அவதாரம் தான் என்று அவசியம் அங்கீகரிக்கவேண்டும். பகவதவதாரங்கள் பத்துத் தான் உண்டென்பது இல்லை. ஸ்ரீமத் பாகவதத்தில் தசாவதாரங்களைத் தவிர வேறு அநேக அவதாரங்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பகவதவதாரங்களில் பூர்ணுவதாரம் அம்சாவதாரம், ஆவேசாவதாரம் என்று பலவகைகள் சொல்வதுண்டு. தத்தாத்ரேயப் பிரபிருதிகளும் அவதார மென்றே கொள்வதுண்டு.

यद्यद्विभूतिमत्सत्त्वं श्रीमदूर्जितमेव वा ।

என்ற கீதாவாக்கியத்தைக் கொண்டு அவதார லக்ஷணத்தையறியவேண்டும். நமது தேவாலயங்களிலிருக்கும் விக்ரஹங்களிலும் பகவான் நித்தியரூபத்துடன் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருப்பதாக விசிஷ்டாத்வைதிகள் மதம். பகவத்பாதாசார்யாள் அவதாரம்செய்யப்போவதாக மத்ஸ்யபுராணத்திலும், கூர்ம புராணத்திலும், சிவரஹஸ்யம் என்ற இதிஹாஸத்

திலும் சொல்லப்பட்டிருக்கிறது. சிவரஹஸ்யத்திலேயே, தான் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் அவர்கள் அவதாரம் பண்ணப் போவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அமார்க்க நிரஸனம் செய்வதும் ஸன்மார்க்க ஸ்தாபனம் செய்வதும் அவதாரங்களின் லக்ஷணம். ஆசார்யாள் சரித்திரத்தில் அந்த லக்ஷணம் பூர்ணமாய் அமைந்திருக்கிறது. ஸாதாரணமாய் அவதாரம் என்று மதிக்கப்படும் இடங்களிலெல்லாம் அர்த்த காமங்களில் அத்யந்தம் துச்சமென்கிற புத்தியும், அனவரதமும் லோகோபகாரார்த்தமாகவே ப்ரவிருத்தியும், மநுஷ்யாதீதமான கார்யங்களோடுகூடின விலக்ஷணமான சரித்ரங்களும் காணப்படுகின்றன இவையெல்லாம் ஆசார்யாளுடைய சரித்திரத்திலும் பூர்ணமாய் காணப்படுகின்றன. ஆகையால் சப்தம் அநுமானம் அர்த்தாபத்தி முதலிய எல்லாப் பிரமாணங்களாலும் ஆசார்யாளை அவதார புருஷரென்றே நாம் அங்கீகரிக்க வேண்டும். சரித்திர மூலமாய் நாம் தெரிந்துகொள்ளும் அவர் செய்ததான மஹத்தான காரியங்களிலிருந்தும், இன்னும் நாம் படித்து அநுபவிக்கும் அவருடைய அற்புத கிரந்தங்களிலிருந்தும் அவரை அவதாரபுருஷர்தான் என்று ஏற்றுக் கொள்ளவேண்டும் ஈசுவரன் லோகஹிதார்த்தம் ஞானோபதேசம் பண்ணுவதற்காக குருரூபமாக அவதரிக்கிறார். குருரூபமான அவதாரம் ஆசார்யாளுடைய அவதாரம்.

சுமார் 3000 வருஷங்களுக்கு முன், மகாவிஷ்ணு

पितरं रोचयामास दशरथम्

என்றபடி ராமாவதாரம் செய்தது போல், கேரள தேசத்தில் காலடி க்ஷேத்திரத்திலிருந்த விப்ரசிரேஷ்டரான சிவகுரு என்பவரைப் பிதாவாக வ்யாஜீகரித்து பகவான் சங்கரரே ஆசார்யாளாக அவதாரம் செய்தார். மூன்றாவது வயதிலேயே ஆசார்யாளுக்குப் பித்ருவியோகம் நேரிட்டது. ஐந்தாவது வயதில் உபநயநம் ஆகி வெகு சீக்கிரத்தில் ஸர்வ வித்யாபாரங்கதாளாக ஆனார்கள் **संस्काराः प्राक्तना इव** என்று காளிதாஸன்

சொல்லியபடி, ஸாதரண மநுஷ்யர்களிற் கூட சிலர்களிடம் சிறுவயதிலே கானம், கணிதம் முதலிய சாஸ்திரங்களில் ஆச்சர்யமாக மேதையிருப்பதை நாம் கண்டிருக்கிறோம். அவதார புருஷர்களான ஆசார்யாளுக்கு அப்யாஸித்துத்தான் வித்தைகளை ஸ்வீகரிக்க வேண்டுவதில்லை. எட்டு வயதாவதற்கு முன்

यदहरेव विरजेत् तदहरेव प्रव्रजेत् ।

என்ற சாஸ்திரத்திற்கு ஆசார்யாள் அதிகாரியாய்விட்டார்கள். தம் அவதார உத்தேசம் நிறைவேறுவதற்காக உடனே ஸந்யாஸங்கொள்ள விருப்பங்கொண்டவராயினும் மாதாவின் மனதை அநுஸரித்து சற்று விளம்பம செய்து கொண்டிருந்தார். **मातृदेवो भव** என்று வேதம் கூறுவதற்கிணங்க மாத்ரு பக்தியுடைய ஆசார்யாள் மாதாவின் அநுமதியுடனேயே ஸந்நியாஸம் கொள்ளவேண்டு மென்றிருந்தார். அத்விதீயமான தேஜஸ்ஸூம் வித்தையும் வாய்ந்த நமது ஆசார்யாளையுத்தேசித்து அநேகம் பேர்கள் தங்கள் கன்னிகைகளை ஆசார்யாள் ஸ்வீகரிக்க வேணுமென்று பிரயத்தினம் செய்தார்கள். ஸாம்ஸாரிகமான பாக்கியங்களை அடைந்து ஆனந்திக்க வேணுமென்று அபிலாஷை கொண்ட ஆசார்யாளின் மாதாவும் ஸம்மதமாயிருந்தும் ஆசார்யாள் அதற்கு உடன் படவேயில்லை.

அர்த்த காமங்களை அளவில்லாமல் அடைவதற்கு சக்தியிருந்தாலும் அவைகளை துச்சீகரிப்பதற்கே வைராக்யம் என்று பெயர். ஆசார்யாள் ஒருஸமயம் பிர்மசாரியாக பிக்ஷையெடுத்து வந்தபோது ஒரு ஏழைப்பிராம்மணஸ்திரீ வேறொன்றும் கொடுப்பதற்கில்லாமல் வெகு வருத்தத்துடன் ஒரு நெல்லிக்காயை ஆசார்யாளுக்கு அர்ப்பணம் செய்தாளாம். ஆசார்யாள் அவளுடைய தாரித்ரியத்தைக் கண்டு இரங்கி கனகதாராஸ்தவம் என்று பேருள்ள ஸ்தோத்ர மூலமாய் ஸ்ரீ மகாலெக்ஷ்மியைப் பிரார்த்திக்க அந்த ஏழை வீட்டில் தங்க நெல்லிக்கனிகள் வர்ஷித்தனவாம். (இவ்விதம் லக்ஷ்மியை

வசீகரணம் பண்ணும்படியான சக்தி யுள்ளவராயினும், ஆசார்யாளுக்கு அர்த்தங்களிடத்தில் அத்தியந்தம அபதார்த்த புத்தியிருந்தது

वेधा द्वेधा भ्रमं चक्रे कान्तासु कनकेषु च ।

என்று சாதாரணர்களை அடிமைப்படுத்தும் அர்த்த விஷயத்திலும் காமவிஷயத்திலும் ஸம்பூர்ணமான வைராக்கியம் ஆசார்யாள் போன்ற அவதார புருஷர்களிடமே காணப்படும்.

ஆசார்யாள் ஸந்யாஸம் கொள்ள ஸமயத்தை ப்ரதீக்ஷித்துக் கொண்டிருந்தபோது ஒரு நாள் சூர்ணநதியில் ஸ்நானம் செய்யும் போது ஒருமுதலை ஆசார்யாளின் பாதங்களைப் பற்றிக் கொண்டது. அந்த அபாய நிலைமையில் ஆசார்யாளின் மாதாவும் அருகிலிருந்தாள். ஆச்ரமாந்தரத்தை பரிக்ரஹித்தால் பிராரப்த்தம் விலகி ஆபத்து நீங்கலாமென்று ஆசார்யாள் அறிவிக்க புத்ரன் எப்படியாவது ஜீவித்திருக்க வேண்டுமென்று வாத்ஸல்யத்தால் தாயாரும் சம்மதித்தாள். உடனே ஸந்யாஸம் கொண்டு மாதாவின் பாதங்களில் நமஸ்கரித்து வெளியே புறப்பட்டு விட்டார். பிறகு தானே அவதாரபுருஷராயிருந்தும் சாஸ்திரத்தை மெப்பிக்கவும், உலகத்தாருக்குத் தானே முறைப்படி நடந்து காட்டவும் ஆசார்யாளைத் தேடியடையும் படி பகவத்பாதாள் ஹிமவத்(கிரி) பர்வதம் சேர்ந்தார். அங்கோர் குகையில் நிஷ்டையிலிருக்கும்கோவிந்தபகவத்பாதாளைக் கண்டார். நிஷ்டை தெளிந்து 'நீயார்' என்று கோவிந்தபகவத்பாதாள் கேட்டகேள்விக்கு ஆசார்யாள்

न भूमिर्न तोयं न तेजो न वायुः

என்று ஆரம்பித்து தசசுலோகி என்கிற பத்து சுலோகங்களைச் சொல்லி விடையளித்தார். அதைக் கேட்டு ஆச்சரியமும் ஸந்தோஷமும் கொண்ட கோவிந்தபகவத்பாதாள் ஆசார்யாளை த்வரையுடன் சிஷ்யராக ஏற்றுக் கொண்டார்.

ஒருவன் மோக்ஷபர்யந்தமான பரமலாபம் அடைவதற்கு ஆசார்யாளை அடைவது அத்யாவச்யம் என்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. आचार्यवान् पुरुषो वेद என்று வேதவாக்கியம். வித்யாக்ரஹணத்துக்கு ஆசார்யாளை அடைந்து அவர் பிரஸாதத்தைப் பெறுதலே அவசியம். சுச்ரூஷையினால் சிஷ்யன் ஆசார்யனுடைய ப்ரஸாதத்தைப் பெறவேண்டும். ஆசார்யரிடமிருந்து ஸாங்கமான அப்யாஸமில்லாமலே அவருடைய ப்ரஸாதத்தினாலேயே சிஷ்யனுக்கு ஞானமுண்டாகலாம். ஆசார்யனிடத்தில் சிரத்தையும் பக்தியும் தான் ப்ரதானம். சங்கர பகவத்பாதாள் தம் குருவினிடத்தில் பண்ணின விசேஷபக்தியாலும் சுச்ரூஷையாலும் அவருடைய அநுக்ரஹத்தையும் உபதேசத்தையும் பெற்று லோகஹிதார்த்தம் பிர்ம்மாத்மை கத்வ ப்ரதிபாதகமான பாஷ்யங்களைச் செய்ய வேணுமென்று தம் குருவின் ஆக்ஞையையும் பெற்றார். பிறகு குருவினிடம் விடை பெற்றுக் கொண்டு கங்காதீரத்தை அடைந்தார். அங்கே ஒரு ஆச்ரமத்தில் வஸித்துக்கொண்டு பிரஸ்தானத்திரயம் என்று சொல்லப்படுகிற மூன்று பாஷ்யங்களையும், எழுதினார். அப்போது அவரிடம் சூழ்ந்திருந்த ஸந்யாஸிகளான ஆயிரக் கணக்கான சிஷ்யர்களுக்குத் தாம் எழுதின பாஷ்யங்களை உபதேசம் செய்து கொண்டிருந்தார். அவ்விதம் தம் சிஷ்யர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் வ்யாஸ பகவானே ஒரு பிராம்மண ரூபமாக அவ்விடம் வந்து அந்த கோஷ்டியில் சேர்ந்து தாமும் ஆசார்யாளின் பாஷ்யபிரவசனத்தை சிரவணம் செய்தாராம். வேதாந்தங்களின் பரமதாத்பர்யமும் வேதாந்த ஸூத்ரங்களின் கர்த்தாவான தம்முடைய ஹ்ருதயமும் பாஷ்யத்தில் அமைந்திருப்பதைக்கண்டு ஆச்சர்யப்பட்டு, சென்ற பதினாறு வய்துபோக இன்னும் பதினாறு வயது இருந்து லோகங்களுக் கெல்லாம் க்ஷேமமுண்டாகும் பொருட்டு அத்வைத ஸித்தாந்தப்ரசாரம் செய்யும்படி ஆசார்யாளுக்கு அநுக்ரஹம் செய்து வியாஸபகவான் மறைந்தாராம்.

தொடரும்.

ஜீவனுடன் யார்போகிறூர்.

இச்சரீரத்தை விட்டு வெளியேறும் ஜீவன் தனியாய்ச் செல்கிறதில்லை அவனுடன் மனஸ் பிராணன் ஸூக்ஷ்மேந்திரியங்கள் பஞ்சப்பிராணன் ஸூக்ஷ்ம பூதங்கள் அவனது கன்மம்வித்யாபிரக்ஞை இவைகளுடன் சூழப்பட்டுத் தான்புறப்படுகிறுன் இதைத்தான் ஸூக்ஷ்ம சரீரமென்றும் யாதனு சரீரமென்றும் சொல்வார்கள் இச்சரீரம் நெருப்பால் எறிக்கத்தகாதது- நீரால் அமிழ்த்த முடியாது. அபரோக்ஷ ஞானமென்ற ஒருமருந்தல்லாது மற்ற எதாலும் நீக்க முடியா தென்பதே பரம ஸித்தாந்தம், இத்தகைய ஸூக்ஷ்ம சரீரத்தைத்தான் யமன் ஸத்தியவானது தேகத்தினின்றும் பாசத்தாற்கட்டி வெளியிலிழுத்ததாய் முன்னற்கூறினேம், ஆனுல் இச்சரீரத்திற்கு வெளியில் ஜலம் சுற்றிக்கொண்டிருக்கும், ஆகையால் யாதனு சரீரமே ஜலமயமானது என்றும் பிரஸித்தி. இதைஜலமயமென்றும் சொல்வதின் பிரயோஜனம் இனித்தெரியவரும். இந்த யாதனு சரீரமே இச்சரீரத்தை விட்டுப் புறப்பட்ட ஜீவன் மறு சரீரமடைவதற்குள் ஏற்பட்ட சுகதுக்கங்களை அனுபவிக்க ஏற்பட்டதால் தான் ஸூத்திரக்காரரும்

तदन्तरप्रतिपत्तौ रंहतिसंपरिष्वक्तः

என்று சொன்னுர், இனிஇந்த யாதனு சரீரம் தேகத்தை விட்டு புறப்பட்டதும் ஓடுகிற தென்றுல் சரீரத்தை விட்டவுடன் ஓடிவிடுகிறதா எந்தமுகம் நோக்கி ஓடுகிறது புண்யம் பாபம்செய்தவர்கள் ஞானிகள். எல்லோருக்கும் ஒரே ஓட்டமா பிரதிதினமும் ஒரு ஊரிலிருக்கிற எல்லா ஜீவர்களும் சேர்ந்து செல்ல முடியுமாவென்பதை விசாரிப்பாம். நமது சரீரத்தை விட்டு வெளியேறும் ஜீவன் பூர்வகன்மாவினுல் வெளியேற்றப்பட்ட போதிலும்பௌதிகசவம் கிடக்குமிடத்திலேயேசுற்றிக்கொண்டு தவித்துக்கொண்டு மறுபடியும் அச்சரீத்தினுட் செல்ல சுதந்

திரமில்லாமலிருக்கும் உட்செல்ல வலிமை இருந்தாலும் பிரவே சித்து முன் போல் இருக்க முடியாது. ஏனெனில் அச்சீவனை வெளியேற்றுவதற்கு உட்சென்ற வியாதி ரூபமான மிருத்யு அங்கிருக்கும். ஆகவே பிறகு பந்துக்கள் அச்சரீரத்தை யெடுத்து அக்னியில் ஹோமம் செய்து விடுவார்கள். இங்கு அவாந்தரமாய் சமயத்திற் சொல்ல வேண்டிய தொன்றைச் சொல்லிப் பிறகு பிரகிருதத்தை ஆரம்பிக்கிறேன். நம்மதஸ்தர்கள் தான் சரீரத்தை தகனம் செய்வதாய் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் தத்வமிது. சரீரத்தை ஜீவன் தனது பரிவாரங்களுடன் விடும்போது எல்லாப்ராணனுடனும் வெளியேறுவானென்று முன் கூறினோம். ஆனாலும் தனஞ்செயன் என்றொரு கிளைவாயுவுண்டு. அவனால் தான் கால்விரலையோ அல்லது எந்த அவயத்தையோ அசைக்க வேண்டுமென்று நினைத்தவுடன் அவ்வங்கத்தை மட்டிலும் ஆட்டுகிறோம். அவன் சரீரத்தின் எல்லாபாகங்களிலும் வியாபித்திருக்கிறான். அவன்தான் இரத்தத்தை ஒரு செகண்டுக்குள் உச்சி முதல் கால்விரல் நுனிவரை எத்தனையோ தடவை ஓடச் செய்கிறான். அத்தனஞ்ஜெயன் மட்டிலும் இச்சரீரத்தை விட்டு ஜீவன் பரிவாரத்துடன் வெளியேறியபோதிலும் தன்னுடைய வேகம் குறைந்தும் அங்கங்கே நாடிகளிலும் சந்திகளிலும் நின்று கொண்டு வெளியேற மாட்டான். இவ்வபிப்ராயத்தையே அமரக்காரரும்

न जहाति मृतंवापि सर्वव्यापी धनञ्जयः ।

ஸர்வ வியாபியான தனஞ்செயன் செத்தவனையும் விடுகிறதில்லையென்றார். இவன் வெளியேறாததால் தான் இச்சீவன் யாதனைக்காக இழுக்கப்பட்டபோதிலும் தனஞ்ஜெயனது பாசத்தால் கீழும் இழுக்கப்படுகிறான். இச்சமயம் புத்திரன் இச்சரீரத்தை தகனஸம்ஸ்காரம் செய்வான். இச்சீவன் முதுகாட்டிலும் சிதைமேல் வைக்கப்பட்ட சரீரத்தின் மேலாகப் பறந்து கொண்டிருப்பான். அச்சரீரத்தை அக்னி ஸம்ஸ்காரம் செய்த பின் அச்சீவன் தான் அபிமானித்த சரீரம். எறியும்போது

தானே எறிவதாய் அவ்வேதனையை அனுபவிப்பான். இது ஸகஜம் தான். இதை உலகத்திலேயே பார்க்கலாம். நமக்கபி மானமான வீடு நெருப்பிலகப்பட்டு எறியும்போது யஜமானன் என்ன பாடுபடுகிறான். அத்யந்தப் பிரியத்திற்கு இடமான புத்திரன் களத்திரம் முதலிய திறந்தால் அதனாலிவன் தாபத்தை அடைந்து அதனாலிறந்தும் விடுகிறான். இப்படியிருக்க ஜீவன் தன் சரீரம் எறியும்போது தான் தாபத்தை யடைவானென்பதை யாவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். இவ்விதம் இச்சீவனது தாபத்தைத் தணிப்பதற்காகவே வீட்டிலும் நதிக்கரையிலுமிரண்டிடத்தில் அச்சீவனை இழுத்து பாஷாணஸ்தாபனம் செய்து அக்குழியிலேயே இருக்கும்படி செய்து பிரதிதினமும் தகனத்தினாலேற்பட்ட பசி தாகம் தீருவதற்கும் பிரேதம் சரீரம் பெறுவதற்கும் பிரேதம் திருப்தி யடைவதன் பொருட்டும் இந்த எள்ளோடும் ஜலத்தைக் கொடுக்கிறேன் என்று ஞாதிகளும் புத்திரர்களும் தர்ப்பணம் செய்கின்றனர். மற்றும் வீட்டில் கற்குழியில் தீர்த்தத்துடன் பாத்திரத்தையும் இளனிகளையும் வைத்திருக்கிறார்கள். இங்கு ஸ்னானம் செய். இங்கு நீரருந்து, இங்கு புசி, இங்கு வசி, என்றும் சொல்கின்றனர். இதில் ஞாதிகள் தான் தர்ப்பணம் செய்யவேண்டும். மற்றவர்கள் செய்யக்கூடாது. ஏனெனில் இறந்த ஜீவனது இரத்த ஸம்பந்த மெங்குண்டோ அவர்கள் தான் கடமைப் பட்டவர்கள். அவர்கள் செய்யாவிடில் மிக எறிச்சலுள்ள அச்சீவன் அவர்களது உடம்பில் தான் அவர்கள் இரத்தத்தை உறியும். இதனால் அவன் ஸந்ததி கெடும். இவ்விதம் ஞாதிகளும் புத்திரர்களும் அக் குழியை விட்டகலாமலிருந்தி 10 நாள் தண்ணீரும் பிண்டமும் கொடுப்பார்கள். இப்பிண்டம் நாளுக்கு நாள் கொடுக்கப்படுவதிலிருந்து தான் முன் சொன்ன ஜலமயமான சரீரம் ஜீவனுக் கேற்படுகிறது

प्रथमेऽहनि यत्पिण्डं तेन मूर्धाऽभिजायते ।
चक्षुःश्रोत्रे नासिका च द्वितीयेऽहनि जायते ॥

भुजौ वक्षस्तथा ग्रीवा तृतीयेऽहनि जायते ।
नाभिस्थानं गुदं लिंगं चतुर्थेऽहनि जायते ॥
ऊरूतु पञ्चमे ज्ञेयौ षष्ठे चर्म प्रजायते ।
सप्तमे तु सिरास्सर्वा जायन्ते नात्र संशयः ॥
अष्टमे तु कृते पिंडे सर्वरोमाण्यनन्तरम् ।
नवमे वीर्यसम्पत्तिः दशमे क्षुत्परिक्षयः ॥
दशमेन तु पिण्डेन तृप्तिः प्रेतस्य जायते ।
आशौचान्ते ततस्सम्यक् पिण्डदानं समाप्यते ॥
ततःश्राद्धं प्रदातव्यं सर्ववर्णेष्वयं विधिः ।
एकोद्दिष्टात्पिशाचत्वं पितृत्वं पिण्डयोगतः ॥

முதல் நாள் பிண்டத்தால் தலையும், இரண்டாம் நாள் காது, கண், மூக்கு, கை, மார்பு, கழுத்து இவைகள் மூன்றுநாளிலும் நாபியும், பின் தட்டும் ஆண் பெண் குறியும் நான்காவது தினத்திலும், ஐந்தாவது தினத்தில், துடையும் ஆறுவது நாளிலும் தோலும் ஏழாவது நாளில் ஸமஸ்த நரம்புகளும் எட்டாவது நாளில் பிண்டத்தால் ரோமங்களும் ஒன்பதாவது நாள் பிண்டத்தால் யாதனை யனுபவிக்க வீர்யமும், பத்தாவது நாளில் பசியின் கொடுமையும் அதிகமாய் ஏற்படும். இதற்காகத் தான் 10 வது நாளில் ப்ராபூதபலி யென்றும் அதிகமாய்க் கொடுக்கிறார்கள். இது எல்லா வருணத்தவராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும். பிறகு ஏகோத்திஷ்டத்தால் பிசாசலோகத்தைவிட்டு விலகும். பிறகு 12-நாள் பிண்டத்தைச் சேர்ப்பதால் பிதிருலோகம் கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு நான் ஆரம்பித்த தென்னவென்றால் நம்மதத்தவர் தகனம் செய்கிறார்களென்றோம். இவ்விதம் தகனம் செய்யாவிடில் தனஞ் ஜெயவாயு கிளப்பாதென்றும் அது சேராததால் ஜீவ

னும் பாகதியை படையமாட்டா னென்பதும் திண்ணம். ஆனால் பாலகர்களுக்கும் துறவிகளுக்கும் ஏன் தகன மில்லை யென்றார் கூறுவாம். பாலனுக்கு சரீர மென்ற அபிமானமில்லை மந்திரஸம்ஸ்காரம் யாதொன்றுமில்லை. ஆதல் பற்றி அச்சரீ ரத்தில் தனஞ்ஜெயன் பிடித்து நிற்காதென்றும் துறவிகள் எல்லா ஆசைகளையும் ஆசைக்கிருப்பிடமான சரீரத்தையும் மறந்ததிலிருந்து அவ்வாயு அச்சரீரத்தில் கூட்டிவிருக்கிற பிளி யின் பழம்போலிருப்பது பற்றி அங்கும் தகனம் வேண்டா மென்றார்கள். ஆதல்பற்றியே திடீரென்றிறந்தவர்களுக்கு அதாவது இடி ஜலம் நெருப்பு இவைகளாலிறந்தால் உடனே பஞ்சப் பிராணனும் ஜீவனும் தனித்தனி வெளியேறி விடுகிற தென்றும் அவைபழையபடி சேர சுமார் 6 மாதகாலம் செல்லு மென்றும் அதன் பிறகு தான் அவனுக்குக் கன்மாரம்பம் செய்யவேண்டுமென்றும் சூக்ஷ்மதரிசிகள் கண்டெழுதியிருக் கிறார்கள். ஆகவே இத்தகைய அவாந்தரக்கதையால் நமக் கேற்பட்ட தென்னவெனில் உத்தமமான தகனக்கிரியையி லிருந்து சிரத்தையுடன் செய்யப்படும் கன்மத்தினால் ஜலமய மான யாதனாசரீர மேற்படுகின்றதென்றும் அச்சரீரம் கிடைத்த பிறகு தான் தனது புண்ய பாப லோகங்களுக்குப் புறப்பட முடியுமென்றும் அப்படியில்லாவிடில் இங்கேயே பிசாசாய் சுற்றிக் கொண்டு தன்னினத்தாரின் ரத்தத்தை உறிகிறா னென்று மேற்பட்டது. இதில் ஒன்றும் எனதபிப்பிராயமே இல்லை. சாஸ்திராபிப்பிராயம் தான் நமதுயுக்தி இங்கு செல்லா தென்பதை நன்கு கவனிக்க வேண்டும்.

न सन्ति पितरश्चेति कृत्वा मनसि यो नरः ।
श्राद्धं न कुरुते तत्र तस्य रक्तं पिबन्ति ते ॥

பிதிருக்களென்பவர் கிடையாதென்றெண்ணி எந்த மனிதன் சிராத்தம் செய்யவில்லையோ அங்கு அவனது இரத்தத்தைப் பிதிருக்கள் உறுஞ்சி விடுவார்கள் என்கிறார். ஆகவே இத்த கைய யாதனாசரீரம் பெற்றுத்தான் ஜீவன் புறப்படுகிறானென் றாயிற்று.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.

திருச்சிருப்பள்ளியைச் சார்ந்த கரூரின்கண் திங்கள்தோறும் இருமுறை வெளிவருதலாவும் சைவபரிபாலனமென்னும் ஓர் அரிய பத்திரிகையினோர் கோணத்தில் சென்னிமலை சுப்பிரமணியக்குருக்களால் ஜகத்குருவிசாரம் எனத்தலைப்பெயரிட்டு, தமக்குத் தோன்றியவாறு அறிஞர்களுக்கழகில்லாத பலவிதமான ஆசங்கைகளுடன் வெளியிடப்பட்ட சில விஷயங்களைக் கண்ணுற்ற காஞ்சீ வாசுதேவய்யர் என்கிற ஓர் தமிழ்ப்பண்டிதர் இயற்கையில் திடமாய்த் தமக்கேற்பட்டிருக்கும் ஸ்ரீ ஜகத்குரு சரணபக்தியினால் மேற்படி குருக்களால் எழுதப்பட்ட தாறுமாறான விஷயங்களைப்பார்த்து மனம் ஸகியாமல் அதற்குக்கண்டனமாய் எழுதி நமது பேரில் பிரசுரிக்கும்படி அனுப்பிய நிரூபம் கிட்டிற்று. சிற்சில காரணங்களால் அதையவ்விதமே வெளியிடுவதற்கியலாவிடினும் அதில் ஆசார்யாளை தெய்வமாய்பாவிக்க வேண்டுமென்றும் அவர்களை யாராவது இகழ்ச்சியாகவோ, நிந்தித்தோ பேசுவரால் அதைத் தவறென்று கண்டிக்கவேண்டியதும் அவசியமென்று கூறும் சாஸ்திரங்களின் கருத்திற்கிணங்க மேற்படி குருக்களுக்குத் தமிழ்ப்பண்டிதர் விளம்பியவிடையை நோக்க அவருக்கு ஆசார்யாளிடமிருக்கும் பக்தியின் வலிமை நன்கு வெளியாகின்றது. இவ்விதம் ஆசார்யபக்தியுடையவர்கள் எப்பொழுதும் அவர்களுடைய அனுக்கிரஹத்திற்குப்பாத்திரர்களாகி விசேஷ சிரேயஸ்ஸை அடைவார்களென்பதும் வெளிப்படையே. சுப்பிரமணியக்குருக்களும் இனியாகிலும் சாஸ்திரங்களாலும் மஹான்களாலும் விசேஷமாய்ப்போற்றக்கூடிய மஹிமை வாய்ந்த லோகாசார்யாளைப் பற்றி அனாவசியமாய்ச் சில தோஷங்களைக் கூறி அதனாலேற்படும் பாபங்களுக்குள்ளாகாமலிருப்பார்களென்று நம்புகிறோம். ப-ர்.